**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-10042026-10738

Volume: 10

Issue: 4

Month: April

Year: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 07.03.2026

Accepted: 26.03.2026

Published: 01.04.2026

Citation:
Nithyasri, T., and S. Maheswari. "The Four Paths in Thiruvasagam." *Shanlax International Journal of Tamil Research,* vol. 10, no. 4, 2026, pp. 80–84

DOI:
https://doi.org/10.34293/tamil.v10i3.10738

*Corresponding Author:
nithyasrit_phd@maher.ac.in

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# The Four Paths in Thiruvasagam

**T. Nithyasri**
*Ph.D. Research Scholar, Department of Tamil, Arts and Humanities*
*Meenakshi Academy of Higher Education and Research, Deemed University, Chennai*
*http://orcid.org/0009-0005-1257-1454*

**S. Maheswari**
*Guide, Assistant Professor, Department of Tamil, Arts and Humanities*
*Meenakshi Academy of Higher Education and Research, Deemed University, Chennai*
*http://orcid.org/0009-0005-2165-2280*

**Abstract**

*Saiva Siddhanta recognizes four spiritual paths (Nalvagai Nerigal) for attaining union with the Divine: Sariyai (righteous conduct), Kiriyai (ritual worship), Yogam (meditative practice), and Gnanam (supreme knowledge). The Thiruvasagam, composed by Manickavasagar, profoundly embodies all four of these paths. Sariyai refers to external acts of devotion performed at Siva temples; Kiriyai involves ritualistic worship of the Sivalinga form; Yogam denotes the inner contemplation and meditation upon Siva; and Gnanam represents the offering of the soul itself to the Divine. Manickavasagar expresses these spiritual disciplines deeply through his hymns — singing with a melting heart, prostrating at the sacred feet of the Lord, and attaining liberation through the path of wisdom. This paper examines the four-fold path as reflected in the verses of Thiruvasagam, exploring Manickavasagar's spiritual journey and the philosophical dimensions of Saiva devotional experience.*

***Keywords:*** *Thiruvasagam, Manickavasagar, Four-fold Path, Sariyai, Kiriyai, Yogam, Gnanam, Saiva Siddhanta, Divine Worship, Spiritual Way of Life.*

**References**

1. "An Introduction to Saiva Siddhanta" Dr. N. Subbureddiyar, Tirunelveli, Tennindiya Saiva Siddhanta Nootrpathippu Kazhagam, Limited, 522, T.T.K. Road, Chennai – 600 018.
2. "Worship (Vazhipaadu)" Ma. Rasamanickanar — Selvi Pathippagam, Karaikudi. First Edition — November 1957.
3. Sri Manickavasagar or The Glory of the Departed (Neethar Perumai) C.K. Subramanya Mudhaliyar, Published by the Members of the Chennai Universal Knowledge Society (Sarvakalasangam), 1924.
4. "Religion and Society in Our Context (Namadhu Nilaiyil Samayam Samudayam)" Thavathiru Kundrakkudi Adigalar — Second Edition — 1990, University of Madras, Chennai – 600 005.
5. "Saiva Siddhanta Dictionary" Prof. A.Ki. Moorthy — First Edition: 1998, Saiva Siddhanta Nootrpathippu Kazhagam, Chennai – 18.
6. "Spiritual Way of Life in Thiruvasagam" Dr. Ti. Mahalakshmi — First Edition: 2018, International Institute of Tamil Studies, Taramani, Chennai.

# திருவாசகத்தில் நால்வகை நெறிகள்

***நித்யஸ்ரீ தி***
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, கலை மற்றும் மானுட அறிவியல்
மீனாட்சி உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
நிகர்நிலைப் பல்கலைக்கழகம், சென்னை

***செ. மகேஸ்வரி***
நெறியாளர், உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, கலை மற்றும் மானுட அறிவியல்
மீனாட்சி உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
நிகர்நிலைப் பல்கலைக்கழகம், சென்னை

***ஆய்வுச் சுருக்கம்***
*சைவ சித்தாந்தத்தில் இறைவனை அடைவதற்கான நால்வகை நெறிகளாக சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன போற்றப்படுகின்றன. மாணிக்கவாசகர் இயற்றிய திருவாசகம், இந்த நால்வகை நெறிகளையும் ஆழமாகப் பதிவு செய்கிறது. சரியை என்பது சிவாலயங்களில் புறத்தொழில் வழியான வழிபாடு; கிரியை என்பது சிவலிங்க வடிவில் பூசை செய்தல்; யோகம் என்பது அகத்தொழில் வழியாக சிவனை தியானித்தல்; ஞானம் என்பது ஆன்மாவையே சிவார்ப்பணம் செய்தல் ஆகும். இந்த நெறிமுறைகளை மாணிக்கவாசகர் தம் பாடல்களில் ஆழமாக வெளிப்படுத்தியுள்ளார். இறைவனை நெஞ்சுருகிப் பாடியும், அவன் திருவடி தொழுதும், ஞான மார்க்கத்தில் நின்றும் முக்தி பெற்ற மாணிக்கவாசகரின் ஆன்மீக அனுபவங்களை திருவாசகப் பாடல்கள் வழி இக்கட்டுரை ஆராய்கிறது.*

***முக்கியச் சொற்கள்:*** *திருவாசகம், மாணிக்கவாசகர், நால்வகை நெறிகள், சரியை, கிரியை, யோகம், ஞானம், சைவ சித்தாந்தம், இறை வழிபாடு, ஆன்மீக வாழ்வியல்.*

## முன்னுரை

திருவாசகத்தில் நல்வழிப்படுத்தும் கருத்துக்கள் மிகையாக உள்ளன. சிவபுராணம் தொடங்கி அச்சோப்பதிகம் வரை மாணிக்கவாசகர் பாடியுள்ள திருவாசகத்தில் வாழ்க்கைக்கு தேவைப்படும் போக்குகள் காணப்படுகின்றன. மாணிக்கவாசகர் இறைவனின் மீது அன்பு செலுத்தி அவர் எவ்வாறு பற்றுகளை நீக்கி ஞானம் பெற்று முக்தி அடைந்தார் என்பதனைத் திருவாசகம் பாடல் வழி அறிந்துகொள்ளலாம். சைவ சமயத்தில் நால்வகை நெறிகள் போற்றப்படும். அவை: சரியை, கிரியை, யோகம், ஞானம். அவற்றை அடிப்படையாகவே மாணிக்கவாசகரும் நெறிமுறைகளைப் பின்பற்றி பாடல்களைப் பாடியுள்ளார்.

## சரியை

சரியை - என்பதற்கு ஒழுக்கம் என்று பொருள் கூறுகிறது தமிழ் இலக்கிய அகராதி.

சரியை - ஒழுக்கம். நாற்படிகளில் ஒன்று. மனிதன் இறைவனை வழிபடுதலின் செய்யப்படும் ஒழுக்கச் செயலாகும். சிவாலயங்களில் சென்று திருவலகிடுதல், திருமெழுகிடுதல், பூந்தோட்டம் அமைத்தல், பூப்பறித்து மாலை தொடுத்துக் கொடுத்தல் முதலியனவும் உருவத் திருமேனிகளாகிய மூர்த்தங்களில் ஒன்றை நியமமாகவும் வழிபடுதலாகும்.

**சரியை வகை**

சரியையில் சரியை: திருக்கோவிலில் அல கிடல், மெழுகுதல்

சரியையில் கிரியை: திருத்தலத்தில் உள்ள பரிவார மூர்த்திகளில் ஒரு மூர்த்தியை வழிபடுதலில் ஈடுபடுதல்.

சரியையில் யோகம்: நெஞ்சில் சிவபெருமான் நிலைநிறுத்தி உருவத் திருமேனியைத் தியானஞ் செய்தல்

கிரியையில் ஞானம்: அத்தியான பாவனையின் உறைப்பினால் அனுபத்தின் வழியாக பட்டறிவு உணர்வு கொள்ளுதலாகும்.

'சரியையாவது தேகத்தினைச் சிவார்ப்பிதஞ் செய்தல். அதாவ புறத்தொழிலின் மாத்திரையானே முதல்வனுடைய உருவத்திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு'. என்று சரியைப் பற்றி சுப்பிரமணிமுதலியார் கூறுவதை நம்மால் அறிந்துகொள்ளலாம்.

**சரியைக் குறித்து,**

**'பாட வேண்டும்நான் போற்றி**
**நின்னையே**
**பாடி நைந்துநைந் துருகி நெக்குநெக்**
**காட வேண்டும்நான் போற்றி அம்பலத்**
**தாடும் நின்கழற் போது நாயினேன்**
**கூட வேண்டும்நான் போற்றி இப்புழுக்**
**கூடு நீக்கெனைப் போற்றி**
**பொய்யெலாம்**
**வீட வேண்டும்நான் போற்றி வீடுதந்**
**தருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே!**
**(திருவாசகம், திருச்சதகம்: 10)**

எனும் பாடலில் மாணிக்கவாசகர் மனம் உருகி பாடியுள்ளதை அறிந்து கொள்ள முடிகிறது.

**கிரியை**

கிரியை - செயல் அல்லது வினை, நோன்பு. கிரியையின் வழியாக வழிபாட்டின் உறுப்புகளாக அமைந்து பல செயல்களைக் குறிக்கும். இலிங்க மூர்த்தியைக் கணிகமாகவும் உடையவராகவும் எழுந்தருள் வித்துப் பூசனைப் பொருள்களைத் திரட்டி, ஓரிடத்தில் அமர்ந்து பூதசுத்தி, முதலிய 5(ஆன்ம சுத்தி, ஸ்தான சுத்தி, திரவிய சுத்தி, மந்திர சுத்தி, லிங்க சுத்தி) முதலிய 5 சுத்திகளைச் செய்து அகத்தும் புறத்தும் சிவனை வழிபடுதல். கிரியையின் உண்மைப் பொருளாக அமைகிறது.

**கிரியை வகை**

கிரியையில் சரியை: சிவ பூசைக்கு வேண்டியவற்றைத் திரட்டுதல்,

கிரி யையில் கிரியை: பூதசுத்தி (ஆன்ம சுத்தி, ஸ்தானசுத்தி, திரவியசுத்தி, மந்திர சுத்தி, லிங்க சுத்தி) முதலிய ஐந்து வகைச் சுத்திகள் செய்து, சிவலிங்க வடிவில் பூசை செய்தல்.

கிரியையில் யோகம்: அகத்தே பூசை, ஓமம், தியானம் என்னும் மூன்றிற்கும் முறையே இதயம், நாபி, புருவநடு ஆகிய மூவிடங்கள் வகுத்துக் கொண்டு செய்யும் அந்தரியாகப் பூசையே யோகமாக அமைகிறது.

4கிரியையில் ஞானம்: அவ்வந்தரியாகப் பூசையின் உணர்வு எழுச்சியால் ஒரு வகையாக பட்டறிவு பெருதலே ஞானநிலையாகும்.

கிரியையாவது இந்திரியங்களைச் சிவார்ப்பிதஞ் செய்தல். அதாவது புறத்தொழில் அகத்தொழில் மாத்திரையானே முதல்வனுடைய அருவுருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு என்று சுப்பிரமணிமுதலியார் குறிப்பிடுவது இங்கு நோக்குதற்குரியதாகும்.

திருவாசகத்தில்,

**"பேசப்பட்டேன் நின் அடியாரில்**
**திருநீறே பூசப்பட்டேன்**
**பூதலரால் உன் அடியான் என்று**
**ஏசப்பட்டேன்"**
**(திருவாசகம், திருச்சதகம்: 10)**

இறையடியார்களுள் என்னை ஒருவராக சேர்ந்து இன்ப துன்பங்களை நீக்கி என்னை ஆட்கொண்டு இறையருளைத் தந்து கிரியை நெறியில் வாழ தனக்கு உதவிய இறையருளின் விதத்தை

மாணிக்கவாசகர் கூறுகிறார். இதனை அடியொற்றியாற்போல,

***ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதியை***
***யாம்பாடக்கேட்டேயும்வாள்தடங்கண்மாதே!***
***வளருதியோ வன்செவியோ நின்செவிதான்?***
***திருவெம்பாவை (1)***

என, முதலும் முடிவும் இல்லாதவன் இறைவன். அத்தகைய இறைவனின் திருவடிகளைப் புகழ்ந்து பாடுவதையும் தொழுவதையுமே கேட்கக்கூடிய செவியாக தம் செவிகளைத் திறந்தருள வேண்டுவதைக் அறியலாம்.

### யோகம்

யோகம் என்பது, 'யோகமாவது கரணங்களைச் சிவார்ப்பிதஞ் செய்தல். அதாவது அகத்தொழில் மாத்திரையானே முதல்வனுடைய அருவத்திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு'. என்று, சுப்பிரமணிய முதலியார் குறிப்பிடுகிறார். யோகம் குறித்து,

***'தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்***
***சங்கரா ஆர்கொலோ சதுரர்?***
***அந்தமொன்றில்லா ஆனந்தம் பெற்றேன்***
***யாதுநீ பெற்றதொன் றென்பால்'***
***(கோயில் திருப்பதிகம்10)***

எனும் பாடலின் மூலம் சதுரர் ஆக வந்து சிவனே எனக்கு முழுமையாக ஆட்கொண்டுள்ளார் என்று பாடியுள்ளதை அறிய முடிகிறது.

### ஞானம்

ஞானம் - அறிவு, சக்திக்குப் பாரியாய பெயர்பதிஞானம்,பசுஞானம்,பாசஞானம் என மூவகையும் திரிகாலஞானம், அடிசேர் ஞானம், அணிமொழி ஞானம் ஆகிய மூன்றும் பதி ஞானத்தில் அடங்குபவை. ஞானமே சமயம் சமயமே ஞானம் எனும் சைவ நெறிப்படி ஞானத்தால் கிட்டுவது வீடு.எல்லாவற்றிற்கும் மேலான ஞானம் சிவஞானம் அல்லது பதிஞானம் எனப்படும். மேலும், "ஞானமாவது ஆன்மாவாகிய தன்னைச் சிவார்ப்பிதஞ் செய்தல். அதாவது புறத்தொழில் அகத் தொழில் என்ற இரண்டுமின்றி அறிவுத்தொழில் மாத்திரை யானேஉருவம்அருவுருவம்அருவம்என்னும் முத்திறத் திருமேனி கடந்த அகண்டாகார நித்த வியாபக சச்சிதானந்தப் பிழம்பாய் நிறைந்துநின்ற முதல்வனிடத்துச்செய்யும் வழிபாடு" என்னும் கருத்தும் ஞான நெறியினைப் பற்றி அறிந்துகொள்ளலாம்.

**ஞானம் சார்ந்த பாடலாக**

***'தன்மை பிறரால் அறியாத***
***தலைவா பொல்லா நாயான***
***புன்மை யேனை ஆண்டுஐயா***
***புறமே போக விடுவாயோ'***
***(அனுபோகசுத்தி-59)***

எனும் பாடல் வழி முழுமையான இறைத்தன்மையை எனக்கு இறைவன் தந்துள்ளார் என்பதை மாணிக்கவாசகர் எடுத்துக் காட்டுவது குறிப்பிடத்தக்கது. இறைவனை ஞானநெறியால் வழிபடும் தன்மையைக் குறிப்பிடும் பின்வரும் பாடலில் குறிப்பிடுகிறார்.

***'ஏழைத் தொழும்பனேன் எத்தனையோ காலமெல்லாம்***
***பாழுக் கிறைத்தேன் பரம்பரனைப் பணியாதே***
***ஊழிமுதற் சிந்தாத நன்மணிவந் தென்பிறவித்***
***தாழைப் பறித்தவா தோணோக்கம் ஆடாமோ"***
***(திருத்தோள் நோக்கம் -13)***

ஆகிய வரிகளில் இறைவனைத் தொழாமல் பல்வேறு விதமான உலக வாழ்க்கையில் ஈடுபட்டு பாழாகி இருந்தேன். அத்தகைய என்னை இறைவன் நல்வழிப்படுத்தி ஆட்கொண்ட விதத்தைப் பற்றி இப்பாடலில் மாணிக்கவாசகர் பாடுவதையும் நம்மால் அறிந்துகொள்ள முடிகிறது.

## முடிவுரை

இறைவனின் திருவடியை அடைதலே பிறவியின் நற்பேறு என்பதை இறைத் தத்து வங்கள் உணர்த்துகின்றன. மனித உயிர்கள் இறைவன் என்னும் மெய்ப்பொருளை அடைவதற்கு ஒழுக்கம் (சரியை) மிக முக்கியமானது என்பதை உணர்தல் வேண்டும் என்பது மாணிக்கவாசகரின் கருத்தாகும். இறைவனுடைய திருத்தலத்திற்குச் சென்று இசையால் பாடி அவனுடைய திருவடிகளை வணங்கி போற்றுதலே உண்மையான வழிபாடாகும். தூய்மையுடன் வழிபடுதலும் நெறிப்பொருளாகக் குறிப்பிடப் படுகிறது. இறை தத்துவத்தின் அனுபவங்களை பெற்றிட நால் வகை நெறிகளால் நின்று, உயர்ந்த மனநிலையைக் கொண்டு போற்றுவதும் தம்மை மறந்து வழிபடுகின்ற காட்சி நிலையம் கிரியையாகப் போற்றப்படுகிறது. ஞானத்தின் வழியே தான் சமயத்தை புரிந்து கொள்ள முடியும்ஞானமாகியமார்க்கமாகியபதி,பசு, பாசம் வழியாக உணர்ந்து உள்ளுணர்தலை மாணிக்கவாசகர் போற்றுகிறார்.

## துணைநூற்பட்டியல்

1. ந. சுப்புரெட்டியார், "சைவ சித்தாந்தம் ஓர் அறிமுகம் × திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட் சாலை, சென்னை.
2. மா. இராசமாணிக்கனார் 'வழிபாடு', செல்வி பதிப்பகம், காரைக்குடி. முதற்பதிப்பு, 1957.
3. சுப்பிரமணிய முதலியார், ஸ்ரீ மாணிக்கவாசகர் அல்லது நீத்தார் பெருமை, சென்னை சர்வகலா சங்கத்தின் அங்கத்தினர் இயற்றியது, 1924.
4. குன்றக்குடி அடிகளார், நமது நிலையில் சமயம் சமுதாயம், இரண்டாம் பதிப்பு 1990, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை.
5. அ.கி.மூர்த்தி, சைவ சித்தாந்த அகராதி முதல் பதிப்பு, 1998, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
6. தி. மகாலட்சுமி, 'திருவாசகத்தில் ஆன்மிக வாழ்வியல்" முதற்பதிப்பு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2018.